S. Ramanathan
Publisher

விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்

சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டார்த் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 8

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா ,, 12-00
1 வருடச் சந்தா ,, 24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டார்த் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஸ ஐப்பசி 29உ சனிக்கிழமை — Colombo, November, 15, 1947 — ஹிஜிரி 1366 முஹர்ரம் பிறை 1 | இதழ் 165

கள்ளத்தனமாகப் புகுத்தப்படும் கபட 'சுதந்திரம்'

பாராளுமன்றத்தை மதியாது, ஊரார் அறியாமல் இரகசிய ஒப்பந்தங்களா?

ஏகாதிபத்திய தாசர்களான யூ.என்.பி.கள் பிரம்மாதமாக விளம்பரம் செய்த டொமினியன் அந்தஸ்து

திருட்டுத்தனமாக பெற்ற பிள்ளை போன்று திருஅவதாரம் எடுத்து வெளிவந்திருக்கிறது

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

கொழும்பு, நவ. 15

"இலங்கை சுதந்திர மசோதா; இலங்கைக்கு ஓர் அலங்கார பெயரை அளிப்பதல்லாமல் அதில் விசேஷமாக ஒன்றுமில்லை".

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் காரியதரிசியும், சென்டரூமாகிய டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் இன்று குடியேற்றநாட்டு மந்திரி பொது மக்கள் சபையில் கொண்டு வந்த இலங்கை சுதந்திர மசோதா சம்பந்தமாக எமக்கு அளித்த சம்பாஷணையின் போது கூறினர்.

"மிகவும் புகழப்பட்ட இந்த 'இராசவாச முதலியார்' பெயரைப்பெற்றுக்கொள்ளுவதற்கு யூ என் பி மந்திரி சபை கொடுத்த விலை குறிப்பிடப்படாதது மிகுந்த ஆச்சரியத்தை அளித்திருக்கின்றது. "ராணுவம், வெளிநாட்டு விவகாரங்கள், பகிரங்க சேவைகள்' ஆகிய மூன்று விஷயங்களின் கீழ் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தம் இந்த மசோதாவின் முன்பு வெளியிடப்படடிருக்க வேண்டும்" என்று மிகுந்த ஆத்திரத்துடன் சொன்னார் டாக்டர் நாகநாதன்.

தொடர்ந்து டாக்டர் நாகநாதன் கூறியதாவது:- "இலங்கை சுதந்திர மசோதாவைப் பார்வையிடுபவர்களுக்கு அதன் முதல் வசனமே ஏமாற்றத்தை அளிக்கின்றது. இலங்கையின் கோரிக்கைக்கு இணங்கி கொடுக்கப்படும் விஷயங்கள் அல்லாதவற்றில் பிரிட்டிஷ்பாராளுமன்றத்தின் சட்டங்கள் ஒன்றும் செலுத்துபடியாகமாட்டாது என்பதுதான் அதிற்குறிப்பிடப்பட்டுள்ளதாகும்.

"இலங்கைக்குச் சுதந்திரம் கொடுப்பதாகிய இந்த மசோதாவில் இந்த விதமான வசனத்தைக் காண்பது ஆச்சரியத்தையும் முன்னுக்குப்பின் முரண்பாட்டையும் தெரிவிக்கின்றது. இவ்விதமான குறிப்பு வெஸ்ட்மினிஸ்டர் சட்டத்தின் கீழுள்ள எந்த டொமினியன் மசோதாவிலும் காணக கிடையாது.

டாக்டர் நாகநாதன் மேலும் தெரிவித்ததாவது:- "விவாகரத்து, விவாகம் ஆகிய விஷயங்களில் முழு உரிமையும் கொடுக்கப்பட்டிருப்பதாகத்தெரிகிறது ஆனால் முக்கியமான விஷயங்களாகிய இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம், நிதி முதலியவற்றில் ஒரு குடியேற்ற நாடு அறிக்கைக்கும் இம்மசோதாவுக்கும் விதேயாசம் எள்ளளவேனும் இல்லை.

"மேலும் மற்றும் டொமினியன் நாடுகள் போன்று இலங்கையும் இம்மசோதாவின்படி இராணுவம், கடற்படை முதலியவற்றின் செலவுகளையும் பெருமையுடன் கொடுபதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், மிகவும் மேலான இராணுவம், கடற்படை, விமானப்படை முதலியவற்றின் கடடுப் பாடுகளையும், தேவைகளையும்லண்டனிலுள்ள வெள்ளை மாளிகையின் விருப்பப்படிதான் செய்து கொள்ள வேண்டுமாம்.

பிரிட்டிஷ கப்பல்தொழிலுக்கும், இலங்கையின் கப்பல்தொழிலுக்கும் இடையில் விதேயாசம் இருக்கப்படாது என்றும் மசோதாவில் கூறியிருப்பினும், நிமிஷலம் பிடிக்கும் தொழில் இலங்கை செய்யக் கூடாதெனத் தடை செய்யப்பட்டுள்ளது. இது இலங்கையருக்குப் பாதகமானதே.

பிரஜா உரிமை சம்பந்தமாக, பிரிட்டிஷ் பிரஜைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு சம்பந்தமாக படை சேர்க்கும் விஷயங்களில் விதிவிலாசங்கள் இருக்கின்றன.

கடைசியாக பிரிட்டனிலிருந்து இலங்கை விலகிக் கொள்ளலாம் என்று பொய்யாக அம மசோதாவில் கூறப்பட்டுள்ளது இதற்கு ஏதாவது பரமாணம அம் மசோதாவில் இருக்கின்றதா எனக் கேட்கின்றேன்?

சுருங்கச் சொன்னால் பிரிட்டிஷ் மோசடிக்காரர்களும், அவர்களுக்குப் பந்தம் பிடிக்கும் யூ. என். பி. காரரும் சேர்ந்து இலங்கை மக்களை ஏமாற்றச் செய்த மசோதாதான் இது.

இலங்கைமக்களின் பிரதிநிதிகளுக்குத் தெரியாமல் இம் மசோதாவுக்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டது ஜனநாயக கொள்கைக்கு முற்றிலும் மூரணானதாகும். இது சுதந்திர மசோதாவுக்கான ஒப்பந்தமல்ல; ஆனால் தூலங்கையர்களின் எதிர்கால சேமத்தை ஒற்றிவைத்ததாகும்.

தேசப் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு தெரியாது இரகசியத்தில் சதியாலோசனை செய்து வெளிவரும் மசோதா உண்மைச் சுதந்திரம் மசோதா ஆகாது என நான் திண்ணமாகக்கூறமுடியும்.

என். எம். பெரேரா அறிக்கை

இலங்கை சமசமாஜக் கட்சித தலைவரும் ருவான்வெளப் பகுதி பாராளுமன்ற அங்கத்தினருமான திரு. என். எம். பெரேரா விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:-

இலங்கை சுதந்தர மசோதாவைப் படிக்கும்போது அதற்குச் சூட்டப்பட்டிருக்கும் அபபெயரின் பொருத்தமற்ற தன்மையே என்னை முதலில் ஆச்சரியபட வைததது. இலங்கைக்கு உண்மைச் சுதந்திரம் ழங்கப்பட்டால் "பிரிட்டிஷ் சாபராஜ்யத்துள் பூரண பொறுப்பாட்சி" என்று கூறுவதில அர்த்தம் கிடையாது. ஏனெனில் "சுதந்திரம் என்று கூறினால் சாம்ராஜியத்தக்கு வெளியே இருப்பது என்றுதான் பொருளபடும். டொமினியன் அந்தஸ்து என்ற வார்த்தை வேண்டும் என்றே உபயோகிக்கப்படவில்லை. இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் வழஙகப்பட்டுள்ள டொமினியன அந்தஸ்து மசோதாக்களின் வார்த்தைப் போக்கே வேறுனது. அடிமை நாடுகள் சம்பந்தமாகப் பொதுவாகப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ள சில மசோதாக்களிலிருந்து இலங்கை தப்புகிறது அவ்வளவுதான். பார்க்கப்போனால மால்டாபோன்ற தேசம் அனுபவிக்கக்கூடிய ஒருவித விசேஷ அந்தஸது நமகுக் கிடைத்திருக்கிறது. மசோதாவில் சோல்பரி அரசியல் சட்டம் பற்றிய பேச்சே காணபடவில்லை. அப்படியானல் அவ்வரசியல் நீடித்திருக்கும் என்றே கருதப்படவேண்டியிருக்கிறது. அப்படியானல் கவர்னர் அதிகாரத்துக்குப் பங்கம இல்லை. கவர்னர் தயவில்லாமல் சில சட்டங்களைப் பாராளுமன்றம் நிறைவேற்ற முடியாது என்றே ஆகிறது. கவர்னரோ குடியேற்றநாட்டு மந்திரியால் வழிகாட்டப்படுவார்.

திருட்டுத்தனமாகப் பாராளுமன்றத்திடமோ பொதுமக்களிடமோ அனுமதி பெறுமல் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு பிரதமர் ஒப்பந்தம் செய்து கையெழுத்துப் போட்டுவிட்டார். தன்னிஷ்டப்படி இலங்

[4-ம் பக்கம் பார்க்க]

வெங்காயம் விற்க மறுத்தார்

எதிரிக்கு ரூபாய் 150 அபராதம்

கொழும்பு, நவ 14

மருதானை டீன்ஸ ரோடைச் சேர்ந்த தாலூக் முகம்மது என்பவர் 47 முத்தல் வெங்காயம் வைத்துக்கொண்டு விற்பனைக்கு இல்லையென்று மறுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கொண்டுவரபபட்ட வழக்கில் தற்காலிக மாஜிஸ்டிரேட எதிரிக்கு ரூபாய் 150 அபராதம் விதித்தார்.

சட்ட விரோதமாக சாராயம் விற்றார்

எதிரிக்கு ரூ 300 அபராதம்

மட்டக்களப்பு, நவ. 14

சட்ட விரோதமாக சாராயம் விற்றதாக புளியந்தீவைச் சேர்ந்த கே நாராயண பிள்ளை என்பவர் மீது கலால் இலாகா இன்ஸபெக்டர் திரு. ஜே ஆம் ஸ்டரோங் என்பவரால் குற்றம் சாட்டிக் கொண்டுவரபபட்ட வழக்கில் மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் திரு. பி. ஸ்ரீ ஸகந்தராஜா எதிரிக்கு ரூ 300 அபராதம விதித்தார்.

சாராயம் மேலதிகமாக வைத்திருந்தார்

சாவகச்சேரி, நவ. 14

கைதடியைச் சேர்ந்த முருகையா பாலசுப்ரமணியம் என்பவர் குறிப்பிட்ட அளவுக்கு மேலதிகமாக சாராயம் வைத்திருந்தாரென்று குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ 25 அபராதம் விதித்தார்.

தீப்பிடித்து மரணம்

மாத்தளை, நவ. 14

அலுவிகாரா என்னுமிடத்திலுள்ள காண்டளீர் கூப்பரே எனனும் இளம் பெண் ஒரு விளக்கை ஏற்றுகையில், கல் விளக்கு தவறி விழுந்து ஆடையில் தீப்பற்றியதால அப்பெண் மரணமடைந்தாளென்று கூறப்படுகிறது.

குடிவெறியில் குழப்பம் செய்தார்

சாவகச்சேரி, நவ. 14

பூநகரி செட்டிகுறிச்சியைச் சேர்ந்த கடையின் பண்டாரி என்பவர் குடித்துவிட்டு வீதியில் நின்று குழப்பம்செய்ததாக குற்றம் சாடடித தொடரப்பட்ட வழக்கில் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ. 5 அபராதம் விதித்தார்.

காலஞ்சென்ற நீதிபதிக்கு அனுதாபம்

மட்டக்களப்பு, நவ. 14

மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட கோர்ட்டில் திரு. பி. ஸ்ரீ ஸகந்தராஜா தலைமையில், காலஞ் சென்ற கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு. வி விஜயரத்தினவின் மரணத்துக்கு அனுதாபந் தெரிவிக்கப்பட்டது.

ஆகஸ்ட் மாதம் பிரிட்டன் வெளியேறும்

பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் சோல்ஜர்கள் கொலை

நியூயார்க், நவ. 13

இன்று ஐக்கிய தேச பொது சபையின் பாலஸதீன உப கமிட்டியில் பிரிட்டிஷ் பிரதிநிதி சர் அலெக்ஸாண்டர் கடோகன் பேசியபோது 1918 ஆகஸட் மாதம் முதல் தேதியன்று பாலஸதீனத்திலிருந்து பிரிட்டன் வெளியேறிவிடு மென்றும் பலாத்காரமாகப் பிரிவினையைப் புகுத்த பிரிட்டன் துருப்புகளை உபயோகிக்கா தென்றும் தெரிவித்தார்.

ஜெருசலேத்தில் வெடிகுண்டு விச்சுகள்

ஜெருசலேம், நவ. 13

இன்று ரிட்ஸ ஹோட்டலில் யூதப் புரட்சிக்காரர்கள் வெடிகுண்டை எறிந்ததால் 7 பிரிட்டிஷ் சோல்ஜர்கள் கொல்லப்பட்டனர்.

ஒரு யூதப் புரட்சிக்காரன் போலிஸ கோஷ்டியில் மறைந்திருந்து சுட்டதால் ஒரு பிரிட்டிஷ் போலிஸகாரர்மாண்டார்.

தேர்தல் ஆட்சேபனை மனு

ஐந்து நீதிபதிகள் முன் விசாரணை

கொழும்பு, நவ. 14

கழனி தொகுதி பாராளுமன்ற அங்கத்தினர் திரு. ஜே. ஆர். ஜயவர்தனவின் தேர்தலை ஆட்சேபித்த கொழும்பு கோர்ட்டில் மனு தாக்கல் செய்த திரு கே ஏ. பெரேராவின் மனுவின் மீது திரு. ஜெயவர்தனு கொண்டுவந்த ஆட்சேபனை சம்பந்தமாக விசாரணை நடைபெற்றது. இந்த ஆட்சேபனையை ஐந்து நீதிபதிகள் முன் விசாரணைசெய்யவேண்டுமென நீதிபதி திரு. பனாயகா இன்று தீர்ப்பளித்தார்.

திரு. வி. வி. கிரி கொழும்பு திரும்பினர்

கொழும்பு, நவ. 14

டில்லியில் நடைபெற்ற ஆசிய தொழிலாளர் மகாநாடிற்குச் சென்றிருந்த இலங்கையிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி திரு. வி. வி. கிரி கொழும்பு திரும்பி வந்து விட்டார். அவர் டில்லியிலிருந்த போது இலங்கை-இந்தியப் பிரச்னைபற்றி மகாத்மா காந்தியுடனும் இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவுடனும் கலந்து பேசினார். இலங்கை பிரதம மந்திரி திரு. சேனநாயக்கா தலைமையில் டிசம்பர் கடைசி வாரத்தில் ஒரு தூதுக்கோஷ்டியார் டில்லி சென்று இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவைச் சந்தித்துப் பேசுவார்கள் என்றும் இலங்கை-இந்தியப் பிரச்னை சமரசமாக முடிவுறுமென்றும் இலங்கை சுதந்திரமடைய வேண்டுமென பண்டித நேரு விரும்புவதாகவும், ஐக்கிய தேசஸதாபனத்தில் இலங்கை அங்கம் வகிக்க இந்தியா ஆதரவளிக்குமென்றும் திரு. கிரி தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இலங்கை சுதந்திர மசோதா

குறிப்பிடும் தேதிவரை பிரிட்டனுக்குட் பட்ட பூரணப் பொறுப்பாட்சி

பாதுகாப்பு, அந்நிய நாட்டு விவகாரம், அரசாங்க உத்தியோகம் ஆகியவைபற்றி ஒப்பந்தங்கள்

கொழும்பு, நவ 14

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்குட்பட்ட பூர்ணபொறுப்பாட்சி அந்தஸ்தை இலங்கை அடைவதற்கான விதிகள் அடங்கிய "இலங்கை சுதந்திர மசோதா" வை பிரிட்டிஷ் காமன்ஸ சபையில் நேற்று பிற்பகல் குடியேற்ற நாட்டு மந்திரி திரு. கிரீச் ஜோன்ஸ் சமர்ப்பித்தார்.

காமன்ஸ் சபையில் விவாதமின்றி இம் மசோதா முதன் முறையாக நிறைவேறியது; வெள்ளிக்கிழமை இம் மசோதா இரண்டாவது முறையாக விவாதிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இம் மசோதா நிறைவேறியதும் இதனை "1947-ம் வருஷ இலங்கை சுதந்திர மசோதா" என்று அழைக்கப்படும். மன்னர்பிரான் சபையில் இச்சுதந்திர மசோதாவை தேசப் பிரமாணமாகக் குறிப்பிடும் தினமுதல், மசோதா அமுலுக்கு வரும். அதனைத் தின் பின் பிரிட்டனில் நிறைவேற்றப்படும் எவ்வகைச் சட்டமும் இலங்கையைக் கட்டுப்படுத்த மாட்டாது என்றும், அதன் பின் பொறுப்புக்கு பிரிட்டிஷ் சர்க்கார் பாத்திரரல்லவென்றும், இலங்கையின் கோரிக்கைக்கு பிரிட்டிஷ் சம்மதத்தின் பேரில் பாராளுமன்றத்தில் நிறைவேறும் சட்டங்கள்தான் இலங்கையைக்கட்டுப்படுத்துமென்றும் அம்மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கும் பிரிட்டனுக்கும் இடையில்—வெளிநாட்டுதொடர்பு, இராணுவப்பாதுகாப்பு, அரசாங்க உத்தியோகத்தர் ஆகிய மூன்று ஒப்பந்தங்கள்—கடந்த செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் மே. த. கவர்னர் ஸர். ஹென்றி மேஸன் மூரும், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் திரு. டி. எஸ். சேனநாயக்காவும் இந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர் என்றும், இவை அரசாங்க அறிக்கையாக பிரிட்டனிலும் இலங்கையிலும் ஏககாலத்தில் இன்று அல்லது நாளை வெளியிடப்படுமென்றும் உள்நாட்டு மந்திரி தெரிவித்துள்ளார்.

காமன்ஸ் சபையில் இம் மசோதாபற்றி கன்ஸர்வேட்டிவ் கட்சியினர் அதிகம் விவாதம் வைத்துக்கொள்ள மாட்டார்கள் என்றும் ஆனல் வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் நல உரிமைகள் முதலியவைபற்றியும் இந்து சமுத்திர பாதுகாப்புபற்றியும் கேள்விகள் கேட்பார்கள் என்றும் தெரிகிறது.

காமன் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு சர்க்கார் அறிக்கையாக வெளியிடப்பட்ட சுதந்திர மசோதா விபரம் வருமாறு:-

(1) இச் சுதந்திர மசோதா அமுலுக்கு வரப்படும் குறிப்பிட்ட தேதிக்குப் பின் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும எந்தச் சட்டமும் இலங்கையைக் கட்டுப்படுத்தமாட்டாது. எந்தச் சட்டமும் இலங்கை விரும்பினுல் அல்லது இலங்கை சர்க்கார் அவசியமென்று கருதி ஒப்புக் கொண்டால்தான் அவை இலங்கையைக் கட்டுப்படுத்தும்.

குறிப்பிட்ட தினத்தின் பின் பிரிடடிஷ் அரசாங்கம், இலங்கை அரசாங்கத்தின் எவ்வித பொறுப்பையும் ஏற்கமாடாது.

குறிப்பிட்ட தினத்தின் பின் இம் மசோதாவின் "முதல் ஷெடியூல்" பகுதியில் குறிப்பிட்ட இலங்கையின் சட்ட ஆக்க அதிகாரம்பற்றிய விதிகள் அமுலுக்கு வரும்.

(2) குறிப்பிட்ட தினத்தின் பின் இலங்கை சாம்ராஜ்ய நாடுகள் ஜாபிதாவில் சேர்க்கப்படும். சாம்ராஜ்ய நாடுகள் இராணுவம், விமானம் ஆகியவை சம்பந்தமான சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டு இலங்கையும் அதில் சேர்க்கப்படும்.

(3) விவாகரத்து அதிகார எல்லைகள்பற்றி இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) குறிப்பிட்ட தேதிக்குப் பின் இம் மசோதாவின் இரண்டாவது ஷெடியூலில் குறிப்பிட்டுள்ள விதிகள் அமுலுக்கு வரும். இந்த புதிய மாற்றங்களால் சட்டங்களில் செய்யப்படவேண்டியதிருத்தங்களை மன்னர்பிரான் அரசாங்க கட்டளையாகப் பிறப்பிப்பார். இந்த உபவிதிகள் இலங்கையை கட்டுப்படுத்தமாட்டாது.

குறிப்பிட்ட தேதிக்குப் பின் 1889-ம் ஆண்டின் சட்டத்திலே குறிப்பிடப்பட்டுள்ள குடியேற்றநாடு (காலனி) என்னும் பதம் இலங்கையைக் கட்டுப்படுத்தமாட்டாது.

இப்பகுதியின் கீழ் உள்ள அரசாங்க கட்டளைகள், வேறு அரசாங்க கட்டளைகளால் வித்தியாசப்படுத்தவோ அல்லது ரத்துச்செய்யவோ முடியும்.

இந்த மசோதா சம்பந்தமாக செய்யப்படும அரசாங்க கட்டளைகளை திருத்தியமைக்க வேண்டுமென பாராளுமன்றத்தினர் குறிப்பிட்ட தினத்திலிருந்து நாற்பது நாட்களுக்குள் கேட்கலாம்.

(5) இந்த மசோதாவுக்கு, '1947-ம் வருஷத்திய இலங்கை சுதந்திரமசோதா' என்றபெயர்.

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆள் மூலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1 மாதம்	ரூ. 2-00
3 மாதம்	ரூ. 6-00
6 மாதம்	ரூ. 12-00
12 மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A, தட்டாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"

194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3811.

சர்வதித்து ஹே ஐப்பசி மீ 29உ
சனிக்கிழமை

இலங்கை "சுதந்திர" மசோதா

சூள்வர் இருட்டில்தான் திருடுவார்கள் அதேபோன்று நேற்று முன்தினம் பிரிட்டிஷ் பொது மக்கள் சபையில் "இலங்கை சுதந்திர மசோதா" கொண்டு வரப்பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும், இலங்கையில் அதற்குப் பங்கம் பிடிக்கும் பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்காவுக்கும் உள்ள அன்யோன்னியத்தை இது நிதர்சனமாக்கி விட்டது. சென்ற சில காலமாக இலங்கையின் அரசியல் சீர்திருத்தங்களாவும் திரைமறைவிலேதான் நடைபெற்றன. முன்பு மந்திரிகள் ஓர் அரசியல் யாதாஸ்தை தயாரித்தனர். மந்திரி சபையினர் அதைக் கண்ணுல் காணும் பாக்கியம் பெற்றோரையன்றி மற்றவர்கள் பார்வையிடக் கொடுத்து வைக்கவில்லை. பின்பு சோல்பரி விசாரணை சபையினர் வந்தார்கள். அவர்கள் முன் மந்திரிகள் நேரடியாக சாட்சியம் கொடுக்க மறுத்தனர். ஆயின் இரகசியக்கில் சாட்சியம் கொடுத்தார்கள் இதன் பயனுக சோல்பரித் திட்டம் வகுக்கப்பட்டது. பாராளுமன்றத் தேர்தல்களும் நடைபெற்றன. இதற்கிடையில் பூரண பொறுப்பாட்சி வழங்குவதற்கான பேச்சு வார்த்தைகளை குடியேற்ற நாட்டு மந்திரியும் திரு சேனநாயக்காவும் நடத்தினர். அதுவும் இரகசியத்தில்தான். சற்றில சாம்ராஜ்ய நாடுகளுக்குட்பட்ட பொறுப்பாட்சியை இலங்கைக்கு வழங்குவதென்று குடியேற்ற நாட்டு மந்திரி சமீபத்தில் அறிவித்தார். ஆனால் அதற்கென சில ஒப்பந்தங்கள செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார். அவ்வொப்பந்தங்கள் புதிய பாராளுமன்றப் பிரதிநிதிகளின் சம்மதத்துடன்தான் உருவாக்கப்படுமென்றும் தெரிவித்தார். ஆனல் நடைபெற்றதென்ன? சென்ற செவ்வாய்க்கிழமை இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திரு. சேனநாயக்காவும், பிரிட்டிஷார் சார்பாக கவனர் ஸர் ஹென்றி மூரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர் என அறியக்கிடக்கின்றது. அவ்வொப்பந்தத்திற்கு மந்திரி சபையினரில் பூரண அங்கீகாரம் உண்டு என்றும் திரு. சேனநாயக்கா பத்திரிகை நிருபர்களுக்குக் கூறியுள்ளார். திரு சேனநாயக்காவின் மந்திரி சபையின அங்கீகாரம் தேச மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றதாகாது. தேச மக்களின் அங்கீகாரத்தைப பெறுவதாயிருந்தால் பிரதிநிதிகள் சபையில் விஷயங்கள் விவாதிக்கப்பட்டபின்தான் ஒப்பந்தம் ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்யவதறிவிட்டனர். காரணம் அவ்வொப்பந்தத்தில் சூதுகள் இருக்கின்றபடியால்தான்.

ஒப்பந்த விஷயங்கள் இலாகையை மிகவும் பாதிக்கக் கூடியவை. இலங்கை இந்திய பிரச்னை, அரசாங்க சேவையாளர்களுக்குத் தொழிற் சங்க உரிமை வழங்குவது ஆகிய அற்ப விஷயங்களில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படாமல் ஒன்றுஞ் செய்ய முடியாதெனக்கூறிய திரு. சேனநாயக்கா இவ்விஷயத்தில மறை பிலகாரணங்கள் ஆற்ற முற்பட்டதன் காரணமென்ன? இன்று இலங்கையில் சிறுபான்மைச் சமூகத்தவர்கள் அரசியல் உரிமையற்று இருக்கிறார்கள். அத்துடன் பெரும்பான்மையான சிங்கள மக்களும் திரு. சேனநாயக்காவின் குடும்பஆட்சியை எதிர்க்கிறார்கள். ஆகவே பிரதிநிதிகள் சபையில் திரு. சேனநாயக்கா இவ்வொப்பந்த விஷயத்தில் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியாது. உண்மையில் இலங்கைக்குச் சுதந்திரப் வழங்கும் மசோதாவாக இருந்தால் இருட்டடிப்பு ஏன்? பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பாடு இன்று திண்டாட்டத்தில் இருக்கின்றது இந்தியா, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து பிரிட்டன் ஒன்றும் இனிமேல பெற்றுக்கொள்ளமுடியாது. அந்த நிலைமையில் இலங்கைக்கு வெறுமனே சுதந்திரம் கொடுக்க சம்மதித்துவிட்டார்கள் என்பதை எவரும் நம்ப முடியாது.

இரகசியத்தில் நடந்தேறி விஷயங்களைத் தேச மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வொப்பந்த விஷயங்கள என்ன என்பது உடனே வெளியிடப்படவேண்டும். பிரதிநிதிகள்சபையில் விவாதிக்கப்பட்ட பின்பே கைச்சாத்திடப்படல் வேண்டும். நேர்மையாக இலங்கைக்குச் சுதந்திரம் கொடுக்க பிரிட்டிஷ் அரசாங்கம் துணிந்திருந்தால் புதிய பொதுத் தேர்தல் வைத்துத்தான் இவ்விஷயப் பிரதிநிதிகள் சபையில விவாதிக்கப்படல் வேண்டும்.

இன்னுமொன்று இது உண்மைச்-சுதந்திரமாகவிருந்தாலும் எந்தத் தேதியில் வழங்கப்படுமென்பது குறிப்பிடப்படவில்லை பர்மாவுக்கு தேதி குறிக்கப்பட்டுள்ளது. ஆனல் இங்கு "ஒரு குறிக்கப்பட்ட நாளில்" தான அது கிடைக்கும்என்று மசோதாவில் சொல்லப்படுள்ளது. இது நூறு ருத்தின் பின்பாகவும் இருக்கும். பாதை அலங்காரத்தில் பொது மக்களை ஏமாற்றி விடலாம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம நினைப்பது கேலி.

இலங்கை மகளே உண்மைச் சுதந்திரந்தான் வேண்டி நிற்கின்றார்கள். ஒப்பந்த விஷயங்கள் உடனே வெளியிடப்படவேண்டும். அதன் பின்தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிர்மை தெரியவரும். திரு சேனநாயக்கா பாராளுமன்றத்தில் கட்சி ஆதரவு குறைந்திருந்தும் கவர்னர் அவரை மிகுந்த அவசரத்துடன் பிரதம மந்திரியாக்கியது இலங்கை மக்களை ஏமாற்றவா என பிரிட்டிஷாரைக் கேட்கின்றோம். சுதந்திரம் ஒருவரால் கிட்டக்கூடிய சட்டமாகக்கப்படும் விஷயமல்ல மக்களின் விருப்பத்தைப பூர்த்தி செயவதாகும் என்பதை பிரிட்டிஷார் மறத்தல் கூடாது.

அரபிய சுதந்திர உரிமைக்கு ஆதரவு

ரஷியப் பத்திரிகை கூற்று

மாஸ்கோ, நவ. 13

"சோவியத் கம்யூனிஸ்ட் பத்திரிகையான "பிரவடா" ரஷியா இதுவரையும் எல்லாத் தேசங்களது சுதந்திரத்தையும் சமமாகவே ஆதரித்துள்ளது இனியும் ஆதரித்து வருமென்றும் அராபியாவின் சுதந்திரத்தை ரஷியா ஆதரிக்கிறது" என்று எழுதியுள்ளது. அது மேலும் கூறுவதாவது:- அராபிய தேச பரம்பரை ஆதிக்குடும்பத்தினரை பிரிட்டிஷ் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் ஆதரித்து பலமுறுத்தினாலும் கோஷ்டிகளோ நீண்டகாலமாக இந்த உதவியைக் கொண்டு அராபிய தேசிய விடுதலை இயக்கத்திற்கு எதிராகவே செயலினறனர். இவ்வியக்கம் அவர்கள ஆட்சிகளை முடிவுகட்டி விடும் என்று அவர்களுக்கு பயம்."

பாலஸ்தீன் சம்பந்தமாக ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள செய்துவரும் தந்திரங்களை ரஷியா அம்பலப்படுத்தி வருகிறது. இதனுல் அராபிய பிறபோக்காளர் சோவியத் யூனியன் அராபியரை எதிர்ப்பதாகக் குற்றஞ்சாட்டி சோவியத் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கச் செய்யும் முயற்சிகள முறியடிக்கப்பட்டு வருகின்றன.

'இந்தியாவில் தலையிடுவோரை எதிர்த்து முறியடிப்போம்'

'சமாளிக்க சக்தியுண்டு; எவரும் வாலாட்டிப் பார்க்கட்டும்'

பாகிஸ்தான் மீது குற்றச்சாட்டு; ஹைதராபாத்துக்கு எச்சரிக்கை

இந்தியா உதவி பிரதம மந்திரியின் வீர கர்ஜனை

ராஜகோட்டை, நவ. 13

"இந்தியாவினருகிலுள்ள ஜூனகத சமஸ்தானத்தில தலையிடுவதற்கு பாகிஸ்தானுக்கு எவ்விதமான அலுவலுமில்லை. இந்தியாவின் எல்லைப்புறங்களில் பாகிஸ்தானே அல்லது வேறெந்த அந்நியநாடுகளோ தலையிட்டாலோ அல்லதுகுழப்பங்களை உண்டாக்கினாலோ இந்தியா பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது.

ஜூனகத் சமஸ்தானாதிபதி தவருன ஆலோசனை கூறிய வர்களாலும் பாகிஸ்தான் சர்க்கார் சூழ்ச்சியாலும் தனக்குத் தானே தொல்லைகளை வரவழைத்துக்கொண்டார். இந்தியா விஷயத்தில் எவரும் தலையிடக் கூடாதென நான் கடுமையான எச்சரிக்கை செய்கிறேன்.

இந்தியா அணுசக்தியமாகப் பயமுறுத்தப்படின் எவ்வித அபாயங்களையும் சமாளிக்க இந்தியா தயாராகவிருக்கிறது. எத்தனை இடங்களில தொல்லைகள் ஏற்பட்டாலும் அவைகள் எல்லாவற்றையும் சமாளிக்க எங்களுக்குப் பலமிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எங்களுடன் எவரேனும் சவால் விடுபடின் அதை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று இந்தியாவின் உதவிப் பிரதம மந்திரி சர்தார் வல்லபாய் படேல் இங்கு நடைபெற்ற பிரமாண்டமானதோர் பொதுக் கூட்டத்தில் பேசியபோது அறைகூவினர். அவர் மேலும் பேசியதாவது:-

ஹிந்துக்களேயோ, முஸ்லிம்களேயோ, சீக்கியர்களேயோ அல்லது, சமஸ்தான மன்னர்களையோ அதிருப்தி செய்யலாகாதென்று அந்தரத்தில் விட்டு அதிகாரத்தை மாற்றிவிட்டுச் சென்ற பிரிட்டனின் செயலால் ஏற்பட்ட தொல்லைகளில் இப்பொழுது ஜூனகத், காஷ்மீர், ஹைதராபாத பிரச்னைகள் சில பாகிஸ்தான் பிரதேசத்தில் இப்படியவைக்கூட கைப்பற்ற இந்தியா கனவிலும் கருதவில்லை ஆனல் இந்தியாவுக்குத் தொல்லை கொடுப்பதையே தனது தொழிலாகக்கொண்டு பாகிஸ்தான் காரியங்களைச் செய்து வருகிறது. பாகிஸ்தான் உதவியளிக்க மறுத்த பின்னரே சமஸ்தான நிர்வாகத்தை இந்தியாவிடம் ஒப்புவிக்க மேஜர் ஹார்வி முன்வந்தார். நிர்வாகத்தை ஒப்புவிக்க திவானுக்கு அதிகாரமில்லையென்று பாகிஸ்தான் கூறுகிறது. ஆனல் திவானே சமஸ்தான நவாபின் சம்மதத்தின் பேரிலும் ஜனங்களின் சம்மதத்தின் பேரிலும் அப்படிச் செய்தார். ஜனநாயக முறையில் பொதுஜனங்களால் ஏற்படும் தீர்ப்பே இறுதியான தென்ற வாக்குறுதியும் அளிக்கப்பட்டுள்ளது.

தனது அயல் நாட்டிற்கு எந்த நாடும் செய்யாத அக்கிரமங்களை பாகிஸ்தான் காஷ்மீர் விஷயத்தில் செய்திருக்கிறது. ஆனல் காஷ்மீரின் எதிர்காலம் ஹைதராபாதைப் போல அதன் மக்கள் கையிலேயே இருக்கிறது. ஹைதராபாத்தும் நியாயமான முறையில் நடந்து கொள்ளாவிடில் ஜூனகத் சமஸ்தானத்தின் கதியே அதற்கும் ஏற்படும்.

இன்று சர்தார் படேல் ஜூனகத்திலுள்ள பகௌதின் கலலூரி மைதானத்தில் நடைபெற்ற பிரமாண்டமான ஓர் பொதுக் கூட்டத்தில் பேசிய போது, ஜனக்கூட்டத்தை நோக்கி, "நீங்கள் இந்தியாவுடன் சேருகிறீர்களா, அல்லது பாகிஸ்தானுடன் சேருவீர்களா?" என்று கூட்டினார். அப்பொழுது ஜனங்கள் யாவரும் கைகளை உயர்த்தி "நாங்கள் இந்தியாவுடன்தான் சேருவோம்" என்று கோஷித்தார்கள். சர்தார் படேல் தெரிவித்ததாவது:-

உலகம் நியாயத்தைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு நியாயமான முறையில் பொதுஜன வாக்கெடுப்பின் மூலம் இப் பிரச்னை தீர்மானிக்கப்படும். நியாயத்திற்கு விரோதமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் எந்த சமஸ்தானத்திற்கும் ஜூனகத் ஒரு படிப்பினையாக இருக்கும். ஹைதராபாத் இந்தியாவின் வயிறுக்குச் சமானமாகும். அது துராலோசகர் பேச்சைக் கேட்டு தவருன வழியில் சென்றால் அதற்கும் ஜூனகத்தின் கதியே ஏற்படும். ஹைதராபாத் கோவாவையோ அல்லது மசூலிப்பட்டணத்தையோ தனது துறைமுகமாக்குவது முடியாத காரியம். ராஜியம் மக்கள் விருப்பப்படி கடை பெற வேண்டுமேயொழிய சந்தையில் வியாபாரி ஆடு மாடுகளை விற்பது போல ராஜ்யத்தை நிஜாம் தன்னிஷ்டம்போல மாற்றிக்கொள்ள முடியாது பொது ஜன விருப்பப்படி நடவாத மன்னர்களின் கதியே நிஜாமுக்கும் ஏற்படும்.

பொதுக் கூட்டத்தில் பேசிய பின் சர்தார் படேலும் அவரது கோஷ்டியாரும் வெர்வால் துறைமுகம் செல்ல ரயிலேறினர்கள். அங்கிருந்து அவர்கள் சோமநாத் ஆலயத்தையும் அதன் பழஞ் சின்னங்களையும் பார்வையிட்டனர். பிறகு கேஷோதுக்கு வந்து அங்கிருந்து ஜாம் நகருக்குப் பயணமானர்கள். ஜாம நகர் ஜாம சாஹிபுடனும் மகாராணியுடனும் தேநீர் அருந்திவிட்டு உடனே டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்,

சென்னை, நவ 12

ஹைதராபாத் அருகில்உள்ள ஜில்லாக்களில் சென்னை சர்க்காரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படுள்ளன

இந்த மாகாணத்தில் நிறுத்தவைக்கப்பட்டுள்ள படைகள் காஷ்மீருக்கு அனுப்பப்படின்றன என்ற செய்தியை அதிகாரவட்டாரங்கள் இன்று பூரணமாக மறுத்து விட்டன. எந்த நிலைமை ஏற்பட்டாலும் சமாளிக்கப் போதுமான படைகள் இம்மாகாணத்தில் வைக்கப்பட்டுள்ளன. இத்துடன் அவசியம்ஏற்பட்டால் இன்னும் அதிகப் படைகள் அனுப்பத் தாங்கள் தயாராயிருப்பதாகவும் இந்திய சர்க்கார் சென்னை சர்க்காருக்கு வாக்களித்துள்ளனர்

இந்திய சர்க்காரின் அதிகாரி ஒருவரை நிஜாம் போலிஸ்காவலில் வைத்துள்ளதாக "தினமணி"யில் வெளியாகியுள்ள செய்தியை அதிகாரிகள் இன்று ஊர்ஜிதம் செய்தனர். இது சம்பந்தமாக சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருடன் கலந்தாலோசித்து வருகின்றனர்.

பல காலிகள் இந்த மாகாணத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இத்திஹாதுல் முஸ்லிமீனைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. மற்றும் பலர் மாகாணத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

ரெவின்யூ மந்திரி சுற்றுப் பிரயாணம்

பெஜவாடா, நவ. 12

ஹைதராபாத் சமஸ்தானத்திலிருந்து அகதிகள் எல்லையை கடந்து வெளியேறுவது தொடர்ந்து நீடிக்கிறது.

இதுவரை ஆந்திர பிரதேசங்களான கிருஷ்ணா குண்டூர் ஜில்லாக்களுக்குள் சுமார் 5500 முஸ்லிம்கள் வந்துள்ளனர். பாஸிஸ்ட் ஸ்தாபனமான இத்திஹாதுல் முஸ்லிமீனின் அடக்கு முறைக்கு பயந்தே ஜனங்கள் வெளியேறுகின்றனர்.

நிலைமையை நேரடியாகத் தெரிந்து கொள்ள எல்லையோரங்களிலுள்ள பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவரும் சென்னைசர்க்கார் ரெவின்யூமந்திரி ஸ்ரீ களாவெங்கட்ராவ் மேலேகூறிய இரு ஜில்லாக்களிலும் பாதுகாப்புபடைகளை அதிகரிக்கவும், உணவு, சப்ளைகள் நிர்வாகத்தைப் பலப்படுத்தவும் தம் சர்க்கார் உடனடியாக நடவடிக்கைகள்எடுத்துவருவதாகக் கூறினர்.

சென்னை சர்க்கார் மேற்கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமாயின் இந்திய சர்க்காரின் உத்தரவை அவசியம் எதிர்பார்த்தேஎடுக்க வேண்டியிருக்கும் என்றார்.

ஸ்ரீ மேத்தா மதன்லால் கைது

கான் சாஹிப்மந்திரி சபையில் பார்லிமெண்டரி காரியதரிசி

இன்னும் 25 பேர்களுக்கு 2 வருஷ சிறை தண்டனை

பெஷாவர், நவ. 11—

எல்லை மாகாண அசெம்பிளி மெம்பரும் கான்சாஹிப் மந்திரி சபையில் பார்லிமெண்ட் காரியதரிசியாகவும் இருந்த ஸ்ரீ மேத்தா மதன்லால் சென்ற சனிக்கிழமையன்று எல்லைப்புற குற்ற விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டார். இம் மாகாணத்தில் கைது செய்யப்பட்ட பிரபல பிரமுகர்களுள் இவர் இரண்டாவதாவர். குதாய் கித்மதகார் தலைவரான கான் அமீன் ஜான்கான் முதலாவதாக கைது செய்யப்பட்டது ஞாபமிருக்கலாம்.

சென்ற அக்டோபர் மாதம் கைது செய்யப்பட்ட அஞ்சுமான் குர்பானின் தலைவர் ஸ்ரீ குலாம் மகம்மது காமா உட்பட 25 பேர்களுக்கு தலா 2 வருஷ கடுங்காவல் சிறை தண்டனை விதிக்கப்பட்டு அவர்கள் ஹரிபூர் மத்திய சிறைக்கு அனுப்பப் பட்டனர்.

இந்தியருக்கு ஐ.நா. சபைப் பதவி

லேக்ஸக்ஸஸ் [நியூயார்க்] நவ12

வாஷிங்டனில் கடந்த இரண்டரை வருஷகாலமாக இந்தியத் தகவல் காரியாலயத்தில் வேலை செய்க வந்த திரு. ஸையத் வேஹாஜுதீன் இப்போது ஐ நா. சபைக் காரியாலயத்தில் ஓர் நியமனம் பெற்றுள்ளார் பால்கன் சம்பந்தமான விசேஷ கமிட்டியின் பகதிரிகைச் செய்தி உத்தியோகஸ்தராக அவர் விளங்குவார்.

(ராய்ட்டர்)

பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி ராஜினமா?

நிருபரிடம் வரவுசெலவுத்திட்ட விபரத்தை முன்கூட்டி தெரிவித்ததாக குற்றச்சாட்டு

காமன்ஸ் சபையில் மன்னிப்புக் கேட்டார்

லண்டன், நவ 13

பிரிட்டிஷ் சர்க்காரின் பொக்கிஷ மந்திரி டால்டன் தனது பதவியை ராஜினமா செய்துவிட்டார். அவருடைய ஸ்தானத்தில் பொருளாதார மந்திரியான ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ பொக்கிஷ மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸர் கிரிப்ஸ் பொருளாதார இலாக்காவையும் சேர்த்து நிர்வகித்து வருவார்.

திரு. டால்டன் பிரிட்டிஷ் வரவு செலவுத் திட்டத்தை பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதற்கு முன்பு அதிலுள்ள விஷயங்களை ஒரு மாலைப் பத்திரிகைக்குத் தெரிவித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். இக்குற்றத்தை அவர் காமன்ஸ சபையில் ஒப்புக்கொண்டார் அதன் மீது அவர் ராஜினமா செய்தார். இச்சம்பவங்கள் நேற்றிரவு வெகு நேரத்திற்குப் பின் நிகழ்ந்தன. திரு. டால்டன் பிரதம மந்திரிக்கு அனுப்பிய ராஜினமா கடிதத்தில் தன் பார்லிமெண்டு அங்கத்தினராக இருந்து சர்க்காருக்கு பூரண ஆதரவளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார். அவருக்கு பிரதம மந்திரி எழுதிய பதிலில், இது ஓர் குறுமில்லாவிடினும் கொள்கைக்கு விரோதமான செயலென்றும், பொறுப்புவாய்ந்த பதவியிலிருந்து விஷயங்களை வெளியாக்கியது சரியானதல்லவென்றும் ஆதலால் ராஜினமா கடிதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியது தனது கடமையென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

வரவு செலவுத்திட்டம் காமன்ஸ் சபையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு 15 நிமிட நேரத்திற்கு முன்பு பத்திரிகை நிருபரிடம் வெளியாக்கியது குற்றமென்றும் அதைப்பற்றி விசாரிக்க சர்வகட்சி கமிட்டி நியமிக்கப்படவேண்டுமென்றும் சர்ச்சில், ஈடன், ஆண்டர்சன் முதலிய எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் தந்திமூலம் ஒரு பிரேரணையை பிரதம மந்திரிக்கு அனுப்பியிருந்தனர்.

ஸர் டால்டன் பதத்திரிகைக்கு விஷயத்தை முன்கூட்டி தெரிவித்தது உண்மைதானுஎன்று எதிர்க்கட்சியார் திரு. டால்டனைக் கேட்டபோது அது உண்மைதான் என்றும் அதற்காக மன்னிப்புக்கோருவதாகவும் திரு. டால்டன் தெரிவித்தார்.

திரு. டால்டன் 1924-வது வருடத்தில் பார்லிமெண்ட் அங்கத்தினராஞர். 1931 ல் பதவியை இழந்தார். பிறகு 1935-ல் தெரிந்தெடுக்கப்பட்டது முதல் பார்லிமெண்டில் இருந்து வருகிறார். 1929 முதல் 1931 வரை அந்நியநாட்டு மந்திரியின் பார்லிமெண்ட் உதவிக் காரியதரிசியாக இருந்தார். 1940 முதல் 1942 வரை பொருளாதார மந்திரியாக இருந்தார். 1942 முதல் 1945 வரை வர்த்தக மந்திரியாக இருந்தார். 1945-வது வருடத்தில் பொக்கிஷ மந்திரியாகஇருந்துவந்தார்.

திரு. டாலடன நேற்று பார்லிமெண்டில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டம் நாட்டின் நிலைமையைச் சமாளிக்கக்கூடியதாக இல்லையென்று பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.

திரு. டால்டன் ராஜினமா செய்துவிட்டதால் மந்திரி சபை 5 நிபுணர்களில் ஒருவரை இழந்துவிட்டது மற்ற நால்வர் அட்லி, பெவின், கிரிப்ஸ, உதவிப் பிரதமர் மொரிஸன். திரு டால்டனுக்கு 60 வயதாகிறது. தொழிற்கட்சி நிர்வாக சபைத் தலைவராக ஒருவருடமிருந்திருக்கிறார்.

(ராய்ட்டர்)

ஹாவன்னா மகாநாட்டு பிரதிநிதி

விமானத்தில் புறப்பட்டார்

கொழும்பு, நவ 14

ஹாவன்னாவிலே நடக்கப் போகும் மகாநாட்டில் இலங்கை பிரதிநிதியாகக் கலந்துகொள்ளும் திரு ஏ. மகாதேவா விமானமூலம் நேற்று புறப்பட்டார். இவர் லண்டனிலுள்ள அரசாங்கப் பிரதிநிதி திரு ஜி. எஸ். கொரியாவுக்கு உதவியாக இருப்பார். ஹாவன்னா மகாநாட்டில் திரு கொரியா கலந்துகொள்வார்.

காலரா நிலைமை

கெய்ரோ, நவ 12

காலரா நோயினல் மேலும் 105 பேர் எகிப்தில் கடந்த 24 மணி நேரத்தில் இறந்தனர். இந்நோய் இங்கு ஆரம்பித்து ஏழு வாரங்களாகின்றன.

[ராய்ட்டர்]

பனிக்கட்டி உற்பத்தி இயந்திரங்கள்

வெளி நாடுகளிலிருந்து பெற முயற்சி

கொழும்பு, நவ. 14

இலங்கைக்கு பனிக்கட்டி உற்பத்தி செய்யும் இயந்திரங்களை வாடகைக்குப் பெறுவதற்கு இங்கிருந்து சில அதிகாரிகள் வெளிநாடு செல்வார்களென்று கூறப்படுகிறது. ஸ்தலத்திலுள்ள வர்த்தகர்கள் சிலர் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனரென்று தெரிகிறது. இலங்கையில் மீன்பிடி தொழிலுக்கு தேவையான பனிக்கட்டிக்கு அரசாங்கம் ஒரு பனிக்கட்டி உற்பத்தி சாலையை ஸ்தாபிக்க முயற்சி செய்தது. வர்த்தகத் துறையில் ஈடுபட்டோரும் அரசாங்கமும் இந்த இயந்திர தளவாடங்கள் இறக்குமதிக்கு எடுத்திருந்த முயற்சிகள் பயனைக் கொடுக்கவில்லை மேலும் டாலர் நெருக்கடி காரணமாக அமெரிக்கா போன்ற இடங்களிலிருந்து இயந்திரங்கள் தருவிக்கவும் முடியவில்லை என்று தெரிகிறது.

பனிக்கட்டி உற்பத்தி இயந்திரங்களை தீவின் பல பகுதிகளிலும் நிறுவுவதற்கு அதிகாரிகள் ஆலோசித்துளளனர். இதற்காக பிரிட்டனுக்கும் மற்ற நாடுகளுக்கும் சென்று கிடைக்கக்கூடிய இயந்திர தளவாடங்களை வாங்குவதற்கு அதிகாரிகள் தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு உதவி அளிக்க ஆலோசித்துள்ளதாகத் தெரிகிறது.

சிறையதிகாரிகளின் குறைகள்

கவர்னரைப் பேட்டி காண அனுமதி கோரிக்கை

கொழும்பு, நவ. 14

சிறைச்சாலை அதிகாரிகள் சங்க கமிட்டியினர் (850 அங்கத்தவர் கொண்டது) மே. த. கவர்னருக்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில் தங்களுக்கு ஓவர்டைம் முதலியன கொடுக்கப்படாது தினசரி 12 மணி நேர வேலைசெய்ய வேண்டியிருப்பதாக தெரிவித்துள்ளனர். பொது சர்க்கார் உத்தியோகங்களிலுள்ள மற்றவர்களுக்கு தினசரி 8 மணி நேர வேலையும் அதற்கு மேற்படின் ஓவர்டைம் சம்பளமும் வழங்கப்படுவது வழக்கமென்றும் அமெரிக்காவில் சிறை அதிகாரிகள் வாரத்தில் 40 மணி நேரமே வேலை செய்ய வேண்டுமென்றும் ஆனல் இவர்கள் 48 மணி நேரம் வேலை செய்வதால் அவர்களது அடிப்படைச் சம்பளத்திலிருந்து 20 சத விகிதம் சம்பளம் அதற்காக வழங்கப்படுகிறதென்றும், ஆஸ்திரேலியாவில் தினசரி எட்டு மணி நேர வேலையென்றும், பிரிட்டனில் வாரத்துக்கு 37 மணி நேர வேலையே யென்றும் இலங்கைச் சிறை அதிகாரிகள் 66 மணி நேரம் (வாரத்தில்) வேலை செய்ய வேண்டி இருக்கிறதென்றும் இதுபற்றி தங்களது தூதுக் கோஷ்டியொன்று கவர்னரைப் பேட்டி காண அனுமதிக்க வேண்டுமென்றும் மேலும் இக்கமிட்டி தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான **ஆப்பிள்** பழங்கள் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரேரச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள் :—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனே
வினே
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டி ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.

எஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு எஜண்டுகள் தேவை

உங்கள் நோய் எதுவானாலும் சரி உத்தரவாதமாய் தீர்த்துத் தருகிறேன்.

வாழ்க்கையைப் பாழ்படுத்தும் கொடூரமான தொத்து வியாதி உள்ளவர்கள் தங்களுக்குப் பின்னல் நோயும் கஷ்டமும் அனுபவிக்கும் சந்தானத்தை தவிர வேருென்றையும் நிலைக்கச் செய்வதில்லை. எனவே உங்களை பிடித்திருக்கும் கொடிய பிணிகளை அகற்றி சுகத்துடன் வாழ என்னுடன் கலந்து ஆலோசியுங்கள். இம்மாதம் எமதுஹெட் ஆபீஸ் 92 செட்டியார்தெரு கொழும்பில் தங்கி இருந்து நோயாளிகளுக்கு தகுந்த சிகிச்சை அளித்து உத்தரவாதமாய் தீர்த்துக் கொடுக்கிறேன்.

குறிப்பு:-

எமது யாழ்ப்பாண கிளை வைத்தியசாலை நவம்பர் மாதம் 19-ம் தேதி புதன்கிழமை காலை 6 மணி முதல் 9 மணிக்குள் வரும் சுப வேளையில் ஸடான்லி ரோட் (வின்ஸர் படமாளிகைக்கு) அருகாமையில் அமைந்துள்ள கட்டிடத்தில் ஸ்ரீமதி ஆயிஷா ரஹூப் பி.ஏ. எல்.டி. அவர்களால் திறந்து வைக்கப்படும்.

AYUR. DR. V. K. S. செல்லப்பாபிள்ளை M. A. M. S. (கல்கத்தா)

சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
ஹெட் ஆபீஸ்: 92, செட்டியார் தெரு, கொழும்பு.
பிராஞ்சு ஆபீஸ்கள்:
பதுளை, யாழ்ப்பாணம்.

மொத்த வியாபாரிகளுக்கோர் சந்தர்ப்பம்.

ஷாப்புச் சாமான்களில் உங்களுடைய தேவைகளுக்கு இலங்கையில் இறக்குமதியாளர்களில் முன்னணி வகிக்கும் எங்களை வினவிக்கொள்ளுங்கள். கீழ்க்கண்ட பண்டங்களில் நாங்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள்:-

லசிஞ்சர்ஸ், சாக்லேட்ஸ், இங்கிலீஷ் பிஸ்கட் தினுசுகள், டின்பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலீஷ் மருந்துகள், டொய்லட் தயாரிப்புகள், நூல் வகைகள், சிகரெட்டுகள், இன்னும் பலவித சாமான்கள்,

கவனிப்பு:-

அயலூர் வியாபாரிகள் மாதிரிப் பட்டியல் (Pro-forma Invoices) களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

O. N. ASSEN MOHAMED & Co.,
3, Dam Street, COLOMBO.
Grams: "JUST" Phone: 4057

சிங்கள அரசியல் பிரசுர மொழிபெயர்ப்பு:

சிங்கள மகாசபையின் அரசியல் பிரசாரம்

ஜாதித் துவேஷத்தைக் கிளப்பும் தந்திரம்

பரம்பரை பணக்காரர் ஆதிக்கத்தை நிலை நாட்டும் டொமினியன் அந்தஸ்து

பிரபல எழுத்தாளரும் முற்போக்கு வாதியுமான திவான வத்தே நந்தசிரி என்பவர் எழுதிய "அடிமைத் தனிக்கு எதிராக" எனும் சிங்களப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட தமிழாக்கம்:

12-11-47 ல் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையின் தொடர்ச்சி.

யுத்த ஆரம்பத்தில்-இலங்கைக்கு அல்ல, சிங்கள மகாஜன சபைக்கு உள்நாட்டு நிர்வாகப் பொறுப்புடைய சுபாதினத்தை கொடுப்பதாக, அன்று அந்நிய நாட்டு மந்திரியாகவிருந்த ஒலிவர் ஸ்டான்லி விடுத்த அறிக்கைக்கு சிங்கள மகா சபையும் சிங்கள மந்திரி சபையும் மட்டற்ற சந்தோஷமடைந்தார்கள். இதைக்கூட ஏற்றுக் கொள்ளுவது பூரண சுதந்திரத்தின் வாயில் அடைந்ததற்குச் சமானமென்று சிங்கள மகாசபை தேசமக்களுக்கு பொய்ப் பிரசாரம் செய்தது. ஆனால், ஏகாதிபத்தியக் கட்டை இன்னும் வரிந்து கட்டுவதற்கு துதைவிட வேறு வழியில்லை என்று அறிவுள்ள மக்கள் நிச்சயித்துக்கொண்டார்கள்.

வேஷதாரிகளான எங்கள் அரசியல் பிச்சைக்காரர்களுக்கு ஏகாதிபத்திய வாதிகள் கொடுத்த விளாம்பழமானது, உள்ளிருக்கும் சதை எடுக்கப்பட்ட வெறுங கோதேயென்று மந்திரி சபையினருக்கு அறியமுடியாதிருந்தது ஆச்சரியமாகும். தேசத்தின் சுயமரிப்பை பலி கொடுத்து வெள்ளை சுல்தான்கள் சொல்லும் எவற்றிற்கும் கை கட்டி வாய்பொத்தி தண்டனமஸ்காரம் பண்ணப் பழகியிருக்கும் எங்கள் மந்திரி சபையினர், தேச மக்களின் சம்மதத்தை அறியாமல்-அலட்சியம் செய்து, டவுணிங்வீதியிலிருந்து இங்கே அனுப்பப்படும் ஒவ்வொரு கோய்க் திருமுகங்களையும் அமிர்தமென்று வரவேற்கத் தயாராய் இருக்கிற இந்த அரசியல் வேஷதாரிகளுக்கு சுதந்திரதாகமுடைய பொது மக்கள் சாட்டை கொடுக்கும் தினம் துரிதமாய் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

இவ்வளவு காலமும் நிர்வாகத் துறையில் ஆதிக்கங்கொண்டிருந்த பணக்காரர்கள் மென்மேலும் தமது பட்டம் பதவியை காப்பாற்றிக் கொள்ளுவதற்காகத்தான்-அவர்களுக்கு உகந்த முறையில்தான்-'கபினெட்' 'டொமினியன்' என்றெல்லாம் வேண்டியிருக்கிறதென்பதை இப்பொழுது பொது மக்கள் நன்குணர்ந்திருக்கிறார்கள். அது பரம்பரைப் பணக்காரர்களுக்கும் சிங்கள மகா சபைக்கும் சுதந்திரம் தான். எனினும், நெருக்கடி உப்பின்னி வாடும் பல லட்சக் கணக்கான தேச மக்களுக்கு சுதந்திரமாகமாட்டாது. ஆனபடியால்தான் தேச மக்களின வாழ்க்கையில் புதுமையைக் கொடுக்கக் கூடிய அரசியல் முறை வேண்டும். அது உண்மை ஜன சம்மத வாதி அரசியல் திட்டமாய் இருக்க வேண்டியது அவசியம்.

வகுப்புவாதி-சிங்கள மகாசபை ஆரம்பிக்கப்பட்டு 9 வருடங்களாகின்றன. இக்காலத்தில் சிங்கள மகாசபையினரும் அதன் தலைவர்களாலும் தேச மக்களுக்குண்டான சேவை என்ன? திரு. பண்டாரநாயக்கா போன்ற ஜனத் தலைவரின் தலைமையில் அவரின் உபதேசத்தின்படி 9 வருடங்களுக்கு முன் தோன்றுவிடில், அல்லது தோன்றி வாளேந்தி கேடயம் பிடிக்காவிட்டால், மிகவும் இழிவான இந்து-லக்கா ஒற்றுமை போன்ற பாஷாக் குளிகை விழுங்கப்பட்டு முழு சிங்கள ஜாதியும் இன்னும் 30 வருடங்களில் அழிந்து போய்விடுமென்று சிங்கள மகாசபைக் கட்சியினர் பறை சாற்றுகிறார்கள். இப்பிரசாரமானது மக்களை ஏமாற்றி அவர்களை உயிருடன் படுகுழியில் தள்ளுவதற்கேதுவான உபாயமென்று அறியாதவர்கள் இன்று இத்தேசத்தில் இல்லை ஜாதியின் பேரால் சிங்களவர்கள் 9 வருடங்களுக்கு முன்னிருந்த துக்ககரமான நிலைமையையும், இதற்கிடையில் சிங்கள வர்க்கத்திற்காக சிங்கள மகாசபை என்ன-எப்படியான சேவைகளைச் செய்திருக்கிறதென்பதையும் இன்று சிங்கள மக்கள் ஹீன தினமடைந்து இருக்கிற நிலைமையையும் யோசிக்கும்போது சிங்கள மகாசபையின் பிரசாரங்களும் செய்கைகளும் வெறும் பித்தலாட்டங்களேயாகும்.

இன்று எமது துக்ககரமான நிலைமையைப் பாருங்கள்! எமது அன்றாட வாழ்க்கையில்-எந்த வகையில்-நமக்கு அபிவிருத்தியுண்டு? நிவாரணமுண்டு?

சிங்கள மகாசபை, சிங்கள வர்க்கத்திற்காக வாளேந்தி கேடயம் பிடித்து ஏதாவது செய்ததுண்டானால், சொன்னமாத்திரத்தில் ரத்தம் கொதிக்கக்கூடிய துக்ககரமான சம்பவங்கள் இனமும் நாம் கேட்க வேண்டியேற்பட்டிராதே? இதெல்லாம் ஜாதியின் பேரால் தம் சுய லாபங்களை உறுதிப்படுத்திக்கொள்ளும் தந்திரமேயாகும்.

வீட்டை உடைக்கையில் தீருடன் கைது

எதிரிக்கு சிறைத் தண்டனையும் அபராதமும்

காலி, நவ. 13

காலிப் பகுதியில் பெட்டி கலாவத்தையிலுள்ள கே. கே எடிபீட்டர் என்னும் வர்த்தகர் பீட்டில் 2-ம் தேதி காலையில் பிட்டர் என்னும் ஜேம்ஸ வீட்டை உடைத்து திருட முயற்சிக்கையில் போலீஸார் கண்டு ஆளை கைது செய்தனர். காலி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் இவரை ஆஜர் செய்தபோது எதிரி மூன் ஏழு குற்றங்கள் புரிந்துள்ளதை ஒப்புக் கொண்டார் நீதிபதி எதிரிக்கு 2 வருட சிறைத்தண்டனையும் அவர்மீது கொண்டுவரப் பட்ட இரு குற்றச்சாட்டுகளுக்கு தலா ரூ. 10 அபராதமும விதித்தார்.

இலங்கை ஹஜ் யாத்ரீகர்கள்

கராச்சியில் தடை

கொழும்பு, நவ. 13

இலங்கையிலிருந்து ஹஜ் யாத்ரீகர்களை ஏற்றிச் சென்று பின் ஜிட்டாவிலிருந்து திரும்பிய இலங்கை விமானம் கராச்சியில தடை செய்யப்பட்டுள்ளது இதில் வந்த பிரயாணிகள் மஞ்சள் காச்சல் தடைச் சட்டப்படி குவாரண்டைனில் வைக்கப்பட்டுள்ளனரென்று கூறப்படுகிறது. இது சம்பந்தமாக பாக்கிஸ்தான் சர்க்காருக்கு இலங்கை சர்க்கார் அறிவித்துள்ளனர். விமானத்தைபற்றிய நகவல் விசாரித்து அறிந்து விரைவில் விமானத்தை இலங்கைக்கு அனுப்பும்படி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கவர்னர் ஜெனரல் ராஜாஜி

காந்திஜியைச் சந்தித்தார்

புதுடில்லி, நவ. 11

இன்று பிற்பகலில் கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியார் பிர்லா மாளிகையில் மகாத்மா காந்தியைச் சந்தித்தார். மாலையில் கவர்னர் ஜெனரல் உணவு மந்திரிக்கும் சுகாதார மந்திரிக்கும் பேட்டியளித்தார்.

மானிப்பாய்க்கு நகர கவுன்சில்

பொதுக்கூட்டத்தில் தீர்மானம்

மானிப்பாய், நவ 13

மானிப்பாய் வாசிகளின் பொதுக்கூட்டமொன்று திரு எஸ். எச். பேரின்ப நாயகம் தலைமையில் மானிப்பாய் பெமோரியல் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. மானிப்பாய்க்கு நகர கவுன்சில் அமைப்பது அவசியம் என்று தலைவர் குறிப்பிட்டார். இதன்பின் ஸ்தலஸ்தாபன சர்க்கார் உதவிக் கமிஷனர் தி. ஸி. சூரியகுமாரன் நகர கவுன்சிலாக மானிப்பாய் கிராமக் கமிட்டியை மாற்றியமைப்பதால் வரும் நன்மைகள் பற்றி விரிவாகப் பேசினார். இக்கூட்டத்தில் இதனை ஆதரித்து திருவாளர்கள் வி. தியாகராஜா, வி. வீ. சிங்கம், வி. எல். சுப்பிரமணியம் முதலியோர் பேசினார்கள். திரு. எஸ். ராஜேந்திரன், மானிப்பாயில் உடனடியாக நகர கவுன்சில் அமைக்க வேண்டுமென பொதுக் கூட்டத்தில் மானிப்பாய் பொதுமக்கள் கோருவதாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இத் தீர்மானத்துக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் தோல்வியுற்றன. இத்தீர்மானம் முடிவில் நிறைவேறியது.

திருவாளர்கள் எஸ். எச். பேரின்பநாயகம், எஸ். ராஜேந்திரன், எஸ். வி. கனகரத்னம், டாக்டர் ஈ. டி. பியூவெல், கே. நடராஜா, வி. வீரசிங்கம், எம். மதியாபரணம், சாம் பி. சபாரத்னம், வி. சுப்பிரமணியம் ஆகியோர் கொண்ட ஒருகமிட்டியை நியமிக்கவேண்டுமென்று திரு. ஆர். வி. செல்லையா கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

40 வருட அனுக்கிரமிப்பு

வாஷிங்டன், நவ. 12

அமெரிக்கக் குடியேற்ற நாட்டு மந்திரி மார்ஷல் லண்டனில் இம்மாதம் நடக்கப் போகும் அயல் நாட்டு மந்திரிகள் மகாநாட்டில் ஜெர்மனி நாலு வல்லரசுகளோடும் ஓர் 40வருட அனுக்கிரமிப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையைப் புதுப்பிப்பார். (ராய்ட்டர்)

ஹோட்டன் பிளேஸ கலகம்

அத்துமீறிப் பிரவேசித்த எசியதாக வழக்கு

கொழும்பு, நவ 13

ஹோட்டன் பிளேஸ் ஹேய்லூட் என்னுமிடத்தில் திருவாளர்கள் ரங்காதன், பி. வீரரத்தினு ஆகியவர்களது அறைகுள் அத்துமீறிப் பிரவேசித்ததாகவும் ஸ்ரீமதி எம். எல் ஏ பெளலிக் புள்ளேயையும், திரு பி. ஸி. எம். கௌரின் என்பவரையும் ஏசியதாகவும் ஹேய்லூட் நம் 10-ம் அறையில் வசிக்கும் திரு டபிள்யு. ஸ்டான்லி டி சில்வா மீது குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின்போது திரு கே. ரங்காதன், ஸ்ரீமதி பெளலிக்புள்ளே (பிரஞ்சு பெண்) ஆகியவர்கள் சாட்சியமளித்தனர் தொடர்ந்து விசாரணையை மாஜிஸ்டிரேட் 19-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

தியேட்டர் மானேஜரைத் தாக்கியதாக வழக்கு

நாவலப்பிட்டி, நவ. 13

நாவலப்பிட்டி தொகுதி தேர்தலின் பின்னரொரு வாரத்தால் மிட்லண்ட் தியேட்டர் மானேஜர் திரு. வி. நடராஜா என்பவரை பியசேனவென்னும் திரு. ஆர். ஈ. ஜெயத்திலகாவின் கார் டிரைவர் தாக்கியதாகவும் உடந்தையாக சார்ள்ஸ் அப்பு என்பவர் இருந்ததாகவும் குற்றஞ்சாட்டி நாவலப்பிட்டி மாஜிஸ்டிரேட் முன் கொண்டுவரப்பட்ட வழக்கு நவம்பர் 14 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கலை அறிவுப்போட்டி நிர். 1ன்

ஆசிரியரின் விடையும் பரிசுபெற்றோர் விபரமும்.

முதலாவது பரிசு ரூ. 500-00
சரியான விடை அனுப்பிய மூவருக்கு
தலைக்கு ரூ. 166-66

1-2 R. S. வேலாயுதம் பிள்ளை, கோப்றட்டிவ்ஸ்ரோர், கனவதல்லை, நமுனுக்கொல்லை, 3, அ. தம்பிப்பிள்ளை, வதிரி, கரவெட்டி. (67-25க்கு 264 கூப்பன்கள் அனுப்பி 2-ம் போனஸ் பரிசு ரூபாய் 50 பெறுகிறார்.)

இரண்டாவது பரிசு ரூ. 300-00
ஒரு பிழையுடன் விடையனுப்பிய 12 பேருக்கு
தலைக்கு ரூபா. 25-00

1-7 P. செல்லையா, மயிலாக்கொல்லை, பசரை (ரூபாய் 76-25க்கு 300 கூப்பன்கள் அனுப்பி 1-ம் போனஸ் பரிசு பெறுகிறார்) 8-10 R. S. வேலாயுதம் பிள்ளை, கனவதல்லை, 11-12 அ. தம்பிப் பிள்ளை, வதிரி கரவெட்டி.

மூன்றாவது பரிசு ரூபா 150-00
இரண்டு பிழையுடன் விடை அனுப்பிய 46 பேருக்கு
தலைக்கு ரூபா 3-26

1-4 K. தெம்பரப் பிள்ளை புலோலி தெற்கு பருத்தித்துறை, 5-11 ஆ. மகாராஜா நாடார், லோவர்வீதி, வதிரி, 12-16, அ. தம்பிப்பிள்ளை, வதிரி, கரவெட்டி, 17-35, P. செல்லையா, மயிலாக்கொல்லை, பசரை, 36-37, A. S. நாகராசா, எக்சைஸ் ஸ்ரேசன், சங்கானை, 38-40, S. பீதாம்பரக் குருக்கள், பருத்தித்துறை, 41-46 R. S. வேலாயுதம்பிள்ளை கனவதல்லை.

அனுதாபப்பரிசு ரூபாய் 100-00 10 பேருக்கு
தலைக்கு ரூபாய் 10-00

1	வி	ஷ்	ணு
2	அ	ம்	பு
3	த	ங்	கை
4	கா	ல	ம்
5	சு	ன	வு
6	ஓ	ந்	தி
7	ஆ	ங்	கு
8	பூ	த	ம்
9	ப	ய	ம்
10	வ	ல	ன்

1. K. பக்கிரதம்பி, N. C. ரோட், திருக்கோணமலை, 2. S. நல்லையா, லொபம், 3. மில், கனகேஸ்வரி யோசப், வத்தளை, 4. R. மாதவன், 8113, கட்டுக்கலை, கண்டி, 5. A. ஆரோக்கியசாமி, Monte, Cristo, நாவலப்பிட்டி, 6. N. ஜோன், ஊர்காவற்றுறை, 7. M. S. H. மரைக்கார், பாலாகம, வில்சன்ஸ், 8. W. S. A. திசேரு, மாம்புரி, 9. W. P. ராமசாமி வவுனாக்கொல்லை, லீன்டுலா, 10. மிஸ். எஸ். பரிமளம், பயலீர் தெரு, மட்டக்களப்பு.

ஏஜன்ஸிப்பரிசு-போட்டி லோலன் காரியாலயம், உடஹந்தன்னை ரூபா 10-00 கனகம் ஸ்ரோர், பருத்தித்துறை, ரூபா 7-50, பூபாலசிங்கம், புக்டிப்போ, யாழ்ப்பாணம். 5-00.

மூன்றும் போனஸ பரிசு ரூபா 25-00 C. கனகசபை, புலோலி மேற்கு, பருத்தித்துறை (ரூபா 51-க்கு 199 கூப்பன்கள் அனுப்பியவர்)

பரிசுத்தொகைகள் 20-11-47ல் அனுப்பப்படும். எமது போட்டியிற் கலந்து கொண்டோர் தொகை மிகச் சொற்பமேயாயினும் எம்மை ஆதரித்த எல்லா நேயர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக:-

Kalai Arivu Potti Nilayam,

கலை அறிவுப் போட்டி நிர். 2

ரொக்கப் பரிசு ரூ. 1650-00
முடிவு திகதி 6-12-47

1-ம் பரிசு	ரூபாய் 750-00	1-ம் போனஸ் பரிசு	ரூபாய் 100-00
2-ம்	,, 300-00	2-ம்	,, 75-00
3-ம்	,, 200-00	3-ம்	,, 50-00

அனுதாபப் பரிசு ரூ 100-00 விசேஷ பரிசு ரூ. 75-00

முதற் பரிசு பெறும் ஒவ்வொருவருக்கும் திறம் பவுண்டன் பேனு ஒவ்வொன்றும் சரியான விடையனுப்பிய முதல்வருக்கு விசேஷ பரிசு ரூபாய் 75-00ம் பரிசளிக்கப்படும். சரியான விடை தெரிந்தெடுத்தல் மிகப் புதிய முறை. பிரவேசக் கட்டணம் ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம் 50. (அணு 8) ரூபாய் 4-00க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் கூப்பன் அனுப்புபவர்கள் தாம் அனுப்பும் கூப்பன்களின் தொகையைப்போல் இன்னொரு மடங்கு பிரவேசக் கட்டணமின்றி அனுப்பலாம். மற்றும் நிபந்தனைகளடங்கிய இலவசக் கூப்பன்களுக்கு உடனே எழுதுக.

விடையும் பரிசு பெற்றவர்கள் விபரமும் 15-12-47 "சுதந்திரனில்" வெளிவரும்

1	அ	ன்	ன
2	பி		வு
3		ட	ல்
4	ப		ம்
5		ந்	தி
6	மா	த	
7		யா	து
8	ஈகா		ல்
9		ண்	மை
10	மா		ம்

குறிப்புகள்:

1. .....யும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஓர் குடும்பத்தார்களுள்ளே இது இருத்தலாகாது:
3. சில பேசும் படங்களில் இது நன்றாகத்தானிருக்கிறது.
4. பாம்பு ஆடும்போது இதை விரித்து ஆடும்.
5. ஒருவகை மரம்.
6. கண்ணகி சரித்திரத்தில் இவளுடைய பெயரும் வருகிறது.
7. புத்தகத்தை .....படித்தும் பரீட்சையிலே தவறி விடுவார முண்டு.
8. இது இல்லாத ஊர் காட்டிற்குச் சமானமாம்.
9. இது உள்ளவன் எக்காலத்தும் அறிஞரால் போற்றப்படுகிறான்.
10. ஒருவருடத்திற் பன்னிரு இது உண்டு.

ஏஜன்சி உள்ள ஊர்களில் நேயர்கள் அவர்களிடமே கூப்பன்கள் பெற்றுக்கொள்தல் நன்று. ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை.

கலை அறிவுப் போட்டி நிலையம்,
மெயின் ஸ்ட்ரீட், பருத்தித்துறை.
POINT-PEDRO. (Ceylon)

"போட்டி முரசு"

வெளிவந்துவிட்டது

கலை அறிவுப் போட்டி நிர் 2க்கு ஆனித்தரமான விடை விமர்சனம். தனிப் பிரதி சதம் 25 ஐம்பது சதம் போஸ்டல் ஓடர் அனுப்பி இரண்டு தடவைக்குரிய விமர்சனம் பெற்றுக்கொள்ளுங்கள்.

போட்டி லோலன் காரியாலயம்,
உடஹந்தன்னை S. P. O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்தம பனத்திற்கு
இரட்டிப்பங்கு பெறுமதியுளது

1948-ம் வருடத்து
மங்களகரமான

மெய்கண்டான்
திருக்குறட்
கலண்டர்

10 × 15 அழகிய படத்துடன்
விலை ரூ. 1-75

முதுமொழிக் கலண்டர்:
7 × 11 படத்துடன் ரூ. 0 85
No. 1 டயறி ரூ 1-50
No. 2 டயறி ரூ 0-85

பிற்பினால் கிடைப்பதரிது!

மெய்கண்டான்
அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி P. O.

சென்னை சட்டசபை அங்கத்தினர்

விவேகானந்த சபை மண்டபத்தில் வரவேற்பு

கொழும்பு, நவ. 14

சென்னை சட்டசபையில் தூத்துக்குடி தொகுதி அங்கத்தினரான ஸ்ரீ கே. ரி. கோசல்ராம் அவர்களுக்கு 12-11-47 மாலை 6 மணிக்கு கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் ஒரு வரவேற்பு நடைபெற்றது. கூட்டத்திற்கு ஸ்ரீமதி ஆயிஷா பி. ஏ. எல். ரி. தலைமை தாங்கினார்.

தலைவியின் ஆரம்பவுரையில் ஸ்ரீ கோசல் ராம் உழைப்பாளிகளின் தோழன் எனவும் இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு மூன்றரை வருஷம் சிறைவாசஞ் செய்தவரெனவும், தீண்டாமையை ஒழித்த திருச்செந்தூரில் ஆலய பிரவேசத்தை அடிகோலி பூர்த்தி செய்தவரெனவும், சட்ட சபையில் அவருடைய சேவையை தமிழ் நாட்டார் ஆவலுடன் கவனித்து வருவதாகவும் கூறினார்.

பின்னர் ஸ்ரீ கே. கலியாணசுந்தர நாடார், ஸ்ரீ கோசல்ராமின் சேவைகளைப் பாராட்டிப் பேசி இலங்கை இந்தியப் பிரயாணிகளுக்கு, புறட்டக்காரியாலயங்களில் அவசியமற்ற சடங்குகளும், அதிகார துஷ்பிரயோகங்களும் ஏற்படுவதை உடன் அகற்றித் தரும்படி ஸ்ரீ கோசல்ராமைக் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமான்கள் ஆர். வரதராஜன், ராஜபாண்டியன், ஜனாப் எஸ். ஒ. ஹபீப் ஆகியோர்களின் சொற்பொழிவுகளுக்குப்பின் ஸ்ரீ கோசல்ராம் பதிலளித்தார்.

அகில ஆசிய நாடுகள் அந்நிய ஆட்சியினின்றும் விடுபட வேண்டுமென்பது இந்தியாவின் லக்ஷியமெனவும் அதை இந்தியா சாத்தியப்படுத்திக் கொண்ட போதிலும் அதன் சகோதர நாடாகிய இலங்கை இன்னும் அந்நிய ஆட்சியினின்றும் விடுதலை பெறுதது பற்றி வருந்துவதாகவும் இலங்கை-இந்தியப் பிரச்னை மிகவும் சுலபமான காரியமெனவும் இலங்கையரும் பூர்வீக இந்தியராகவே இருப்பதால் இலங்கையரும் இந்தியர்கள் விஷயததில் தாராளமாய் நடந்து கொள்வார்களென்று நம்புவதாகவும், இலங்கை-இந்தியப் பிரயாணிகளுக்கு மண்டபம் தூதுக்குடி ஆகிய இடங்களில ஏற்படும் இடைஞ்சல்களைப் இந்திய சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் கூறினர்.

கடைசியாக ஸ்ரீ எஸ். ஏ. ராமச்சந்திரன் வந்தனோபசாரம் சொல்லுகையில் கூட்டத் தலைவி ஸ்ரீமதி ஆயிஷா ரஹீம் அவர்களை பொறுமையும் இறமையும் வாய்ந்த பெண்மணியென்றும் சென்னை சட்டசபையில் ஸ்ரீ கோசல்ராம் அங்கம் வகிப்பது எவ்வளவு முக்கியமோ அதேபோன்று இலங்கை பார்லிமெண்டில் ஸ்ரீமதி ஆயிஷா ரஹீம் அங்கம் வகிக்க வேண்டியது அவசியமென்றும் தகுந்த முன்னறிவிப்பு இல்லாது போயினும் அவ்வளவு பெருந்திரளான ஜனங்கள் பங்கெடுத்துக் கொண்டதைப் பாராட்டியும் பேசினர்.

கள்ளத்தனமாக புகுத்தப்படும் கபட 'சுதந்திரம்'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையை அறுக்கமுடியாத கட்டில பிணைத்துவிட்டார்.

காரியம் எல்லாம் முடிந்த பிறகு இப்போதே கதை அவிழ்க்கப்படுகிறது. "கையெழுத்திட்டுவிட்டேன். நாடு அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இலங்கையின் மானம் போய்விடும்" என்று பீதிக் காரியத்தைச் சாதிக்கப் பிரதமர் நம்புகிறார்.

"ஒப்பந்தத்தை நிராகரிக்க வேண்டும்"

சேனாநாயக்கா செய்திருக்கும் ஒப்பந்ததை நிராகரிக்க வேண்டும் என நமது கட்சி கருதுகிறது. எல்லா எதிர்க் கட்சிகளும் இதனையே கருதுகின்றன என நான் எண்ணுகிறேன்

பிட்டர் கெனமன் அறிக்கை

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசியும் பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் தோழருமான திரு. பிட்டர் கெனமன் விடுத்திருக்கும் அறிக்கை கீழே தரப்படுகிறது:-

"இலங்கை சுதந்திர மசோதா" என்று சொல்லப்படும் இம் மசோதா நமக்குச் சுதந்திரம் தரவில்லை சுதந்திரம் என்பது வெறும் சட்ட உரிமைகள் மட்டுமல்ல ராணுவ, அரசியல், பொருளாதார சமூகத்துறைகளில் இருந்து பிரிட்டிஷ் பிடிப்பை எல்லா வகையிலும் ஒழிப்பதே சுதந்திரம்.

சுதந்திரம் என்றால்,

(1) பிரிட்டிஷ் துருப்புகள் இலங்கையில் இருந்து வெளியேற வேண்டும். இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் ராணுவத்தளங்கள் இலங்கைப் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கவேண்டும்.

(2) இலங்கையின் பரிபூரண சுதந்திர உரிமையை பிரிட்டன் அங்கீகரிக்க வேண்டும்.

(3) வெளியார் தலையீடின்றி இலங்கைப் பொது ஜனங்களின் பிரதிநிதிகள் இலங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டும்.

(4) இலங்கையில் உள்ள எல்லா பிரிட்டிஷ் வர்த்தகமும் தேசத்தின் சொத்தாக வேண்டும்

இதுவே நமக்கு வேண்டும் சுதந்திரம். மந்திரி சபையும் பிரிட்டிஷ் அரசாங்கமும் ஒப்பந்தம் செய்த பின்பே மசோதா பிறந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த விதமான பின்வாசல் ஒப்பந்த நடவடிக்கைகள் சேனாநாயக்கா நிர்வாகத்தில் ததும்பி நிறைகிறது.

புதிய அரசாங்கம் வேண்டும்

இந்த வேளையில் எல்லா இடதுசாரிகளும் முற்போக்கு வாதிகளும் ஒன்றுசேர்ந்து உண்மைச் சுதந்திரத்திற்குப் போராடும் புதிய அரசாங்கத்தை சமைக்கவேண்டும். இன்றைய அரசாங்கததைக் கவிழ்க்க வேண்டும் காலம் பறகின்றது. இடதுசாரிகள் ஒன்றுபடாமல் தாமதித்தால் ஏகாதிபத்தியத்துக்கு சேனாநாயக்கா மந்திரிசபை இலங்கையை ஈடு வைத்து முடித்துவிடும்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கருத்து

இலங்கை போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் கருத்து பின்வருமாறு:-

இரவில் புகும் ஒரு கள்வனைப் போன்று நமகுச் 'சுதந்திரம்' வந்துள்ளதால் நமது கட்சி ஏமாந்து விடவில்லை அட்டை பில 'சுதந்திரம்' என்ற வார்த்தை; உள்ளே 'சாம்ராஜ்பத்துள் பூரண பொறுப்பாட்சி' என்று இருக்கிறது. இது டொமினியன் அந்தஸ்துமல்ல இதன் பூரண அர்த்தத்தையும் நமமால் இப்போது சொல்ல முடியாது இரகசிய ஒப்பந்தத்தின் ஷரத்துகள் தெரிந்த பின்தான் நமது இன்றைய நிலையில இம்மசோதாவால ஏதும் மாற்றமுண்டாகுமா என்று தெரியும் சேனாநாயக்கா கும்பலும் ஏகாதிபத்தியமும் கூடுச் சதியாலோசனைகள் செய்துவருகின்றன யூ. என். பிக்கு பெருமபான்மை ஸ்தாபிதத்துக்கொடுப்பதற்காக தேர்தலுக்கு முன் டொமினியன் அந்தஸ்துப் படாடோபப் பிரசாரததை, ஏகாதிபதியம் செய்ய முன்வந்தது. இன்று தடுமாறும் யூ. என். பி. பெரும் பான்மைக்கு முண்டுகொடுப்பதற்கே இப்புதிய மசோதா.

நாம் இரகசிய ஒப்பந்தத்தை உடனே வெளியிடவேண்டும் என்று கோருகிறோம். அதனை நிராகரிக்கவேண்டுமென்று உடனே வேண்டிக்கொள்கிறோம். அழகிய சுதந்திரமசோதாவல்ல பிரிட்டிஷ் துருப்புகளைக் கப்பலேற்றி, பிரிட்டிஷ் கவர்னரை வழியனுப்பி, சோல்பரி அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு ஒரு அரசியல் நிர்ணய சபை சர்வஜன வாக்குரிமையில் தெரிவுத்த இன்று வேண்டியது.

உடனே பொதுத் தேர்தல்

ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கக் கூடாது ஒருபொதுத்தேர்தலில் பொதுமக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கவேண்டும்

இடதுசாரிக் கட்சிகள் ஒன்றுபட்டு எதிர்க்கட்சி சக்திகளை பாராளுமன்றத்திலும் வெளியிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும், அதன் உள்ளூர்த் தாசர்களுக்கு கெதிராகவும் வழிநடத்திச் செல்ல வேண்டும்.

ஜி. ஆர் மோத்தா அபிப்பிராயம்

இலங்கை இந்தியன் காங்கிரஸ் காரிய தரிசியும் பாராளுமன்ற அங்கத்தினருமான ஜி. ஆர். மோத்தா பின்வரும் அபிப்பிராயத்தை எமக்குக் கூறினர்.

இலங்கைப் பாராளுமன்றத்தைச் சற்றும் சட்டை செய்யாது குள்ளப்பிள்ளைப் பிரசவத்தைப்போல ஒப்பந்தம் திரகசியத்தில் நடத்தப்பட்டிருகிறது எவ்வளவு அழகிய பிள்ளையானலும் குளைப்பிள்ளையை யாரும் கண்ணியப்படுத்த மாட்டார்கள். பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே இது பற்றிய முடிவு செய்ய வேண்டும் அவர்களே இதனை நிராகரிக்கவோ ஏங்கவோ அதிகாரம் உடையவர்கள்.

இலங்கைவாழ் இந்தியர்கள் இலங்கை பரிபூரண சுதந்திரம் பெற்று இதர ஆசிய நாடுகளுடன் தொடர்பு கொண்டு விளங்க வேண்டும் என்று விரும்புகின்றனர். பிரிட்டனுக்கு இலங்கையில் ராணுவவிமான தளங்களை சேனாநாயக்கா கோஷடி கொடுக்க முன்வருவதைக் கண்டு இலங்கை இந்தியர்கள் அதிர்ச்சியும் பயமும் கொள்கின்றனர்.

ஐக்கிய தேச பாதுகாப்பு சபையில் உக்ரைன்

இந்தியாவின் தாராள மனப்பான்மை

நியூயார்க், நவ. 18

ஐக்கிய தேச பாதுகாப்பு சபையில அங்கம் வகிக்க இந்தியாவும் உக்ரைனும் போட்டியிட்டதில் 11 தடவை தேர்தல் நடைபெற்றும் முடிவு ஏற்படாது முட்டுக்கட்டையான நிலைமை இருந்து வந்தது' இந்தியா தாராள மனப்பான்மையுடன் போட்டியிலிருந்து விலகிக்கொண்டதால் இன்று உக்ரைன்பாதுகாப்புசபை அங்கத்தினராகத் தெரிவு செய்யப்பட்டு விட்டது. பொதுச் சபைக தலைவரான பிரசில பிரதிநிதி டாகடர் அரன்ஹா இந்தியாவின் தாராள மனப்பான்மையைப் பாராட்டிப் பேசினர். இந்தியா போட்டியிலிருந்து விலகிக்கொண்டதால் சில வல்லரசுகளுக்கிடையே பாதுகாப்பு சபை ஸ்தானங்களைப் பங்கிடுவது குறித்து ஏற்பட்டுள்ள ஒப்பந்தங்களை இந்தியா ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படலாகாதென்றும் இவ் விஷயததை பொதுச் சபையில இந்தியா மீண்டும் கவனத்திற்குக் கொண்டுவருமென்றும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் தெரிவித்தார்.

ஐக்கிய தேச தர்மகர்த்தா நிர்வாக சபையின் இரு கல ஸ்தானங்களுக்கு பிலிபைன, ஈகாஸ்டாரிகாவும் தெரிந்தெடுக்கப்பட்டன.

தென்னப்பிரிக்க இந்தியர் பிரச்னை

சமரச மகாநாடு கூட்ட தீர்மானம்

நியூயார்க், நவ 12

தென்னப்பிரிக்க இந்தியப் பிரச்னை சம்பந்தமாக இந்திய சர்க்கார்-தென்னப்பிரிக்க சர்க்கார் சமரச மகாநாடு கூட்ட வேண்டுமென்றும் அம் மகாநாட்டில் பாகிஸ்தானும் சேர்க்கப்படவேண்டுமென்றும் இன்று ஐக்கியதேச அரசியல் கமிட்டியில இந்தியாவின் பிரதிநிதி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் ஒரு தீர்மானத்தைப் பிரரேபித்தார். அப்பொழுது அவர் பேசியபோது உலக சமாதானத்தை விரும்பும் நாடுகள் இனத்துவேஷத்தால் ஏற்படும் ஆபத்தைக் குறித்து கவலைகொள்கிறதென்றும், ஆதலால் இதைப் பற்றி சமாதானம் விரும்புவோர் முடிவுசெய்ய வேண்டுவது அவசியமென்றும் தெரிவித்தார்.

தென்னப்பிரிக்க மந்திரி மன்னிப்புக் கேட்டார்

அரசியல் கமிட்டியில் தென்னப்பிரிக்க பிரதிநிதி லாரன்ஸ் பேசியபோது மத வித்தியாசம் இருந்து வருவதற்கு உதாரணதை எடுத்துச் சொல்லும போது ஒரு முஸ்லிம் 10 மனைவிகளைக் கலியாணஞ் செய்து கொள்ள முடியுமென்றும் ஆனால் ஒரு ஐரோப்பியன் ஒரு மனைவியைத்தவிர இன்னொரு மனைவியைக் கலியாணம் செய்தால் சிறைசெல்லவேண்டுமென்றும் தெரிவித்தார். இந்த உதாரணம் இஸ்லாம் மதத்தினர் மனதைப் புண்படுத்தக் கூடியதென்று எகிப்து பிரதிநிதி ஆட்சேபித்ததின்பேரில் அவரிடமே தென்னப்பிரிக்கப் பிரதிநிதி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் (ராய்ட்டர்)

நிர்பூரா சமஸ்தானத்திற்கு இந்திய துருப்புகள்

புதுடில்லி, நவ. 11—

நிரிபுரா சமஸ்தானத்திற்கு இந்திய துருப்புகள் அனுப்பட்டுள்ளன. பாகிஸ்தான் மாணமான கிழக்கு வங்காளத்தின் கழக்கு எல்லையில இந்த சமஸ்தானம் இருக்கிறது. சென்ற ஆகஸ்டு மாதமே இது இந்திய யூனியனில சேர்ந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த சமஸ்தானம் பாகிஸ்தானில சேர வேண்டுமென்று சில காரியசமீபதில இங்கு கிளர்ச்சி நடந்து இதனால சமஸ்தானதிற்கும் அண்டையிலுள்ள பாகிஸ்தான் பிரதேசத்திற்கு மிடையேயுள்ள எல்லையில கலவரமான நிலைமை நிலவியதாலேயே துருப்புகள் அனுப்பப்பட்டன

நிரிபுரா சமஸ்தானத்தில் வாழ்பவர்களில் தான 80 சதவிகிதம் வசிக்கிறார்கள். மன்னர் இந்து மன்னர்தான்.

சட்டதையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் கலகம ஏற்படாமல் தடுக்கவும் பாதுகாப்படை உதவுதேதிதே சர்க்கார் இந்த துருப்புகள் அனுப்பியுள்ளனர்

பாரட்டியவர்களுக்கு ராஜாஜியின் நன்றி

புதுடில்லி, நவ. 11—

ராஜாஜி கவர்னர் ஜெனரர் பதவி ஏற்றுக்கொண்டதற்காக வருகுப் பலர் பாராட்டுச் செய்திகள அனுப்பியிருந்தனர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தது ராஜாஜி ஒரு அறிக்கை விடுத திருக்கிறார்.

ரஷியச் செல்வாக்கு நாடுகள்

அவைகளுக்கு உதவிபுரியக் கூடாது என்கிறார் ஹாரிமன்

வாஷிங்டன். நவ. 13

அமெரிக்க வாத்தகக் காரிய தரிசி திரு. ஹாரிமன் அமெரிக்க அயல் நாடுதச் சபையின் பிரசுகையில எதுர்காலத்தில ரஷ்யாவின் செல்வாக்குப் பரவும் நாடுகளுக்கு அமெரிக்க உதவிகளை உடன் நிறுத்திவிட வேண்டும் என்ற கொளகையைத தாம் ஆதரிப்பதாகக் குறிப்பிட்டார்.

அப்படி ஏதாவது நாட்டில் ரஷியச் செல்வாக்கு ஏற்பட்டால அந்த நாட்டில் எனது பிரததை பாய்விடும் எனவும் அவர் கூறினர்.

கிங்ஸ்லியில்

தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

கண்ணுக்கினிய ஜோடிகள்!
அபூர்வ நடனங்கள், பாடல்கள் நிறைந்தது

விடுதலைக்குப்பின் கிருஷ்ணன்தோன்றும்
மகத்தான 2வது படம்

கன்னிகா




உங்கள் உள்ளங் கவர்ந்த நடிகர்களான
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜினி,
எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் நிறம்பட நடித்தது.

ஜிந்துப்பிட்டி தியேட்டர்
இப்பொழுது
தினசரி மாலை 6 மணி, இரவு 9—30 மணி
மாஸ்டர் விட்டல் நடித்த
"லக்கி ஸ்டார்"
(அதிர்ஷ்ட நக்ஷத்திரம்)
என்னும் ஹிந்தி பேசும் படம் காட்டப்படும்

நேயர்களுக்கு.....
இளைஞன்
(-வார இதழ்-)
17-ம் தேதி இதழ் முதல் "இளைஞன்" விலையைக் குறைத்துள்ளோம்.
தனிப் பிரதி சதம் 5.
ஏஜெண்டுகள் இல்லாத இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.
இளைஞன் பிரசுரலயம்,
நிர். 2, கிரான்ட்பாஸ் வீதி,
கொழும்பு.

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 ச் ஸ்டிரீட் (செடடியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இலங்கை சுதந்திர மசோதா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மசோதாவில் 'குறிப்பிட்ட தினம்' என்றிருப்பது மன்னர்பிரான் அரசாங்க கட்டளைமூலம் மசோதாவை அமுலுக்குக் கொண்டுவரக் குறிப்பிடும தினமேயகும்.

முதல் ஷெடியூல்

இலங்கை அரசாங்கத்தின் அதிகாரம்

(1) இலங்கை பாராளுமன்றம் குறிப்பிட்ட தினத்தின்பின் நிறைவேற்றும் எந்தச் சட்டத்தையும் 1865-ம் வருடத்திய பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு (காலனி) அதிகாரச் சட்டம் பாதிக்கமாட்டாது.

குறிப்பிட்ட தினத்தின் பின் இலங்கை பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் எந்தச் சட்டமும் பிரிட்டிஷ் சட்டதிட்டங்களினால் பாதிக்கப்படமாட்டாது.

(2) இலங்கை பாராளுமன்றம் தனது சகல விஷயங்களிலும் சட்டங்களை ஆக்கிக்கொள்ள பூரண அதிகாரமுடையதாகயிருக்கும்.

(3) 1894-ம் வருடத்திய வர்தகக் கப்பல் மசோதாவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் இலங்கை பாராளுமன்றததைக் கட்டுப்படுத்தமாட்டாது.

(4) 1890-ம் வருடத்திய கடற்படை குடியேற்றநாடு கோர்டுகள் மசோதாவும் இலங்கையைக் கட்டுப்படுத்தமாட்டாது.

இரண்டாவது ஷெடியூல்

இலங்கையைப் பாதிக்காத திருத்தங்கள்

[1] பிரிட்டிஷ் பிரஜைகள் சம்பந்தமான சட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

[2] இறகுமதி நீர்வைச் சட்டம் சம்பந்தமான விபரங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

[3] 1923-ம் வருட நிதி மசோதாவில் இலங்கையும் சேர்க்கப்படும்.

[4] 1934-ம்வருடத்திய குடியேற்றநாட்டு நிதி மசோதா (ஸ்டாக் அக்ட்) வில் இலங்கையும் சேர்க்கப்படும்.

(5) இலங்கையில் அடைக்கப்படும இராணுவம் சம்பந்தமாக மற்றும டொமினியன் களிலுள்ள சட்டம் இங்கும் செல்லுபடியாகும்.

[6] கப்பல்கள், விமானங்கள் சம்பந்தமான சட்டங்கள் ஒற்றத்தம் செய்யப்பட்டுள்ளன.

[7] கப்பல் விமானம் முதலியன மாற்றப்படுவதைக் கட்டுப்படுத்தும் 1939 ஆண்டுச் சட்டத்தில் இலங்கையில் பதிவு செய்யப்பட்டது அல்லது இலங்கையின் சட்டங்களுக்கு ஏற்க லைசென்ஸ கொடுக்கப்பட்டுள்ளதென்ற காரணத்தால் எந்தக் கப்பலுக்கும் அனுமதிக்கப்படமாட்டாது.

(8) திமிங்கல மீன்பிடிச்சட்டதில் 1934 "பிரிட்டிஷ் கப்பல்" என்று கூறப்படும்பொழுது இலங்கையில பதிவு செய்யப்பட்டுள்ள கப்பல் இதில் சேர்க்கப்படமாட்டாது.

[9] விவாகம் சம்பந்தமான சட்டததில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

[10] "காப்பிரைட்" உரிமை சட்டம் சம்பந்தமான திருத்தங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

காந்திஜிக்கு காஷ்மீர் மலர்கள்

பண்டித நேரு அளித்தார்

புதுடில்லி, நவ. 12—

காஷ்மீரில் பரமுலாவிலிருந்து கொண்டு வந்திருந்த பூச்செண்டை மஹாத்மா காந்திக்கு பண்டித நேரு அளித்தார்,

இந்திய முஸ்லிம்கள் காங்கிரஸில் சேரவேண்டும்

முஸ்லிம் தலைவர்கள் மகாநாட்டில் மௌலானா பேச்சு

புதுடில்லி, நவ. 13

இன்று நடைபெற்ற இந்திய முஸ்லிம தலைவர்கள் மகாநாட்டில் இந்தியா கல்வி மந்திரி மௌலானா அபுல்கலாம் அசாத் பேசியபோது, இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் அரசியலில் வகுப்பு வித்தியாசம் பாராட்டுவதைக் கைவிட்டு காங்கிரஸில் சேரவேண்டுமென்று தெரிவித்தார். மகாநாட்டுக்கு 9 மகாணங்களிலிருந்தும் 200 முஸ்லிம் தலைவர்கள் விஜயம் செய்திருந்தனர். இம் மகாநாட்டில் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் எதிர்கால நிலைபற்றி தீர்மானம் செய்யப்படும். மகாநாட்டுத் தீர்மானங்கள் தயாரிக்க 15 பேர்களடங்கிய கமிட்டி நியமிக்கப்பட்டது.

(அ-பிரஸ)

இலங்கை அரசாங்க தொழிற்சங்க ஆலோசகர்

திரு ஹல்ஸன் ராஜினமா சமர்ப்பித்தார்

கொழும்பு, நவ. 14

இலங்கை அரசாங்கத்தின் தொழிற் சங்க ஆலோசகராக மூன்று வருட ஒப்பந்தத்தின் மேல் இலங்கை வந்த திரு. டி. ஹல்ஸன் தமது பதவியிலிருந்து ராஜினமா செய்வதாக அறிவித்துள்ளார் என்று அறியப்படுகிறது. அதிருப்தி காரணமாகவே இவர் பதவியிலிருந்து ராஜினமாச் செய்வதாகத தெரிகிறது.

ஒலொன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட்டிற்காக, 1947-ம் ஒக்டோபர் மீ 15ஆ இந்த பத்திரிகை 194A. பட்டாசத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கூடத்தில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் இங்கரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org